கல்கமுவ பிரதேச சபை - 2024

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்கமுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கல்கமுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுடன் இணங்காமை**

| நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் பிரகாரம் நிறுவனத்தின் இருப்பில் பாதகமாக தாக்கமளிக்கின்ற தரப்பினர்களுடன் காணப்படுகின்ற கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த 07 வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம் | ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 03 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் மூன்று சுற்று மின்சார வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா | இந்தத் தொகை நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளக்கி 2025 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரித்து | மூலதன செலவினங்களைச் செய்தல் சரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,245,804 செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | பட்டியல் அல்லது கடப்பாடுகள் இன்றி ரூபா 133,800 கடன் தொகை கடன்கொடுத்தோர் ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 133,800.00 தொகை கடன் கொடுத்தோர் ஆக 2024 ஆம் ஆண்டுக்குரிய தேசிய வாசிப்பு மாதத்தில் பாடசாலை மாணவர்களுக்காக வாசிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ஆகும். | கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்ற பின்னர் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் களஞ்சிய விடயங்களில் ஏடுகளின் பிரகாரம் மீதிக்கும் நிதிக்கூற்றுக்களில் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே 18 விடயங்களில் ரூபா 138,621 வேறுபாடு காணப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள வேறுபாடுகள் சரிசெய்யப்படும். | இருப்பு பதிவேட்டை நாளதுவரையாகப் பேணிச் செல்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் சரியாக மீதிகளை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அலுவலக உபகரண விடயங்கள் 08 விடயங்களின் இன் பெறுமதி பட்டோலைகள் மற்றும் அதற்குரிய கணிப்பிடலின் பிரகாரம் மீதிக்கும் இடையே ரூபா 885,758 வேறுபாடு காணப்பட்டது. | 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்து மீதியை சரியான பட்டோலைகளில் இட்டு அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 134 ஆம் பிரிவு | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான ஆகக் கூடிய ஆதனவரி அளவை பெற்றுக் கொள்ளும் வகையில் இயலுமான வரை அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் | தற்காலிக மதீப்பீடு ஒன்றிற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | மதிப்பீடு நடவடிக்கைகளை விரைவாகப் பூர்த்தி செய்து ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சான்றிதழை அடிப்படையாகக் கொண்டேலும் ஆதனவரியை தற்காலிக மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 571 | கூட்டுப் பெறுமதி ரூபா 3,121,862 ஆன 195 உடன்படிக்கை வைப்புக்கள், 28 கேள்வி வைப்புக்கள், 42 நானாவித வைப்புக்கள் மற்றும் 05 நிர்மாண வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டு முதல் அரை ஆண்டு பட்டியல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2019 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் 2019/02 என்ற உள்ளூராட்சி சுற்றறிக்கை | | | |
| | 8 ஆம் பிரிவு | சபைக்கு உரிய பொதுச் சந்தைகளின் வியாபார வகைகளின் பிரகாரம் வலையங்கள் பிரித்து திட்டம் ஒன்று தயாரித்து அதற்கு சபையின் அங்கீகாரம் பெற்று அதன் பிரகாரம் கடைகள் ஒதுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தற்போது காணப்படுகின்ற நிலைமையின் அடிப்படையில் ஏதாவது திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,959,535 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 42,723,222 ஆகும்.

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒருதடவை மதிப்பீட்டு திணைக்களத்தை வரவழைத்து நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையினால் ஆதனவரி மதிப்பீடு இறுதித் தடவையான 2015 ஆம் ஆண்டின் போது | மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்டதுடன் அது 2024 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. எனினும் தற்போது அதற்கான | காலரீதியில் ஆதனவரி மதிப்பீட்டை மேற்கொண்டு சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அங்கீகாரம் கிடைத்துள்ளமையால் உரிய மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 1,808,025 காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 396,454 மீதி காணப்பட்டது. | நிலுவைப் பணம் காணப்படுகின்ற கடைகள் அமைந்துள்ள காணியின் உரித்து தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதுள்ளது. | கடைகளின் உரித்தை விரைவாக தீர்த்து வைத்து நிலுவை மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (ii) | 03 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 91 கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 30 கடைகள் மதிப்பீட்டு அறிக்கை பொதுச் சபைக்கு அனுப்பப் பட்டிருக்கவில்லை. அதில் துரிசெவன கடைகள் 28 இற்குரிய அறிக்கை 2021 ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை குழுவிற்கு மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | காலரீதியில் கடை வாடகை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 51 விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | 30 பிரதான விடயங்களின் கீழ் உள்ள 51 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய தேவையான விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் உப விதிகளை விதிப்பதற்கோ அல்லது அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | அத்தியாவசிய விடயங்கள் தொடர்பாக மாத்திரம் உபவிதிகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 04 கணக்கு மீதிகளில் ரூபா 29,500,402 மீதியான பெறுமதி மற்றும் ரூபா 304,500 முற்கொடுப்பனவுப் பெறுமதியாக இருந்ததுடன் அந்த மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 24,908,150 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி ரூபா 4,596,751 அறவிடப்படாமல் காணப்பட்டது. | ஆதனவரி நிலுவைக்காக அந்தத் தொகையை அறவிடுவதற்கு சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. கடை வாடகையாக உள்ள நிலுவைப் பணம் காணியைத் தீர்த்து வைத்த பின்னர் நடவடிக்கை எடுப்பதுடன் வேலைக் கடன்பட்டோர் தொடர்பாக இதுவரை அந்த தொகை கிடைத்திருக்க வில்லை. | பெறவேண்டிய கடன் மீதிகளை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 60,706,466 ஆக இருந்ததுடன் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சுக்குரிய ரூபா 51,657,350 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 9,049,115 ஆகும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் இருப்பை உறுதிப்படுத்தி விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் கல்கமுவ தள வைத்தியசாலை மற்றும் அவசர சந்தர்ப்பங்களின் போது ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை எரிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபையின் மேற்பார்வையோ அல்லது எந்த ஒரு கட்டண அறவிடலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சுடலைக்கூட வளவில் சேகரிக்கப்படுகின்ற சிகிச்சைக் கழிவுகளை எரிக்கும் வரை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பாதுகாப்பு முறைமை ஒன்று தயாரிக்கப்படாமையின் காரணமாக விலங்குகளினால் கழிவுப் பொருட்கள் மீண்டும் மீண்டும் இழுத்துச் செல்லப்படுகின்றமை, எரிக்கப்பட்ட சாம்பல் மற்றும் தடுப்பூசி துண்டுகள் அகற்றுவதற்காக உரிய வேலைத்திட்டம் ஒன்று காணப்படாமை, தகனக் கூடத்தின் நடவடிக்கைகளுக்காக சுற்றாடல் பாதுகாப் அனுமதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற பிரச்சனையான நிலைமை காணப்பட்டது. | தகனக் கூடம் கல்கமுவ தளவைத்தியசாலை மற்றும் அதிகார பிரதேசத்தின் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் அழிக்கும் நடவடிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. முறையான மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் சுற்றாடலில் சேகரிக்கப்படுகின்ற சிகிச்சைக் கழிவுகளை எரிக்கும் வரை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு போதிய அளவான வசதிகள் காணப்படாதிருந்த போதும் தற்போது பாதுகாப்பாக அவற்றை களஞ்சியப்படுத்தி வைக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | கழிவு பொருட்களை அகற்றுதலை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி ஏல விற்பனைகளில் இருந்து கிடைத்த இரண்டு பொதுக் காணிப் பகுதிகளை ஆக்க பூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தாது இருந்ததுடன் அவற்றைக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை கூறுகளாக்கும் போது அதற்குரிய அபிவிருத்தித் திட்டம் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் காணி அபிவிருத்தி செய்யப்படாமை மற்றும் காணி கேள்வி குறைவடைந்தமையால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமையால் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கோ அல்லது கையேற்பதற்கோ முடியாதிருந்தது. | காணிகளைக் கையேற்று குறித்துரைத்த பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | வடமேல் நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரப் பிரிவினால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டிகளின் பிரகாரம் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அவற்றை அமுல்படுத்துவதற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் சபை அங்கீகரித்த வருடாந்த பாதீட்டு அறிக்கை யாவும் தற்போது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் செயலிழந்து காணப்படுகின்ற 19 நீர்ச் சங்கங்களை செயற்படுத்தி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படும். | சமுதாய அடிப்படையிலான அமைப்புக்கள் சபையினால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வாடகைக்கு வழங்கி வருமானம் உழைக்கப்பட்ட மெதகம பல்நோக்குக் கட்டிடத்தின் உரித்து தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்குதல் நிறுத்தப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இந்த பிரச்சனைகளை அனுப்பி அதில் இருந்து கிடைக்கும் பதிலின் பிரகாரம் சொத்து பதிவேட்டில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரித்தை விரைவாக உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கமநெகும விசேட செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு முன்பள்ளி பாடசாலை உபகரணங்கள் நியமத்திற்கு புறம்பாக இருந்தமை காண்பித்து பிரதேச செயலாளரால் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்ட | இது தொடர்பாக உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2018 செப்தெம்பர் 26 ஆந் திகதி எழுத்து மூலம் கடிதம் அனுப்பி | முறையற்ற வகையில் செலுத்தப்பட்டுள்ள தொகையை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 485,100 தொகை சபை நிதியில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாகாண கணக்கு குழு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு கட்டளையிட்டிருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதி ஒன்றுடன் உரிய உத்தியோகத்தர் கடமையில் ஈடுபடுகின்ற நிறுவனத்துக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி ரூபா 50,115,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கல்கமுவ பழைய நூலகக் காணி நிதிக்கூற்றுக்களில் அதன் கிரயமான ரூபா 7,965,000 இல் காண்பிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்தின் பெறுமதி மாத்திரம் கணக்கீட்டு வழுவாக ஏற்றுக்கொள்கின்றோம். 2025 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுப்பெறுமதி ரூபா 10,732,000 ஆன 04 காணி, கட்டிட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,267,500 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள், 03 காணிகள் மற்றும் 143 மயான நிலங்களின் உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்படாது இருந்ததுடன் அந்த சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் ரூபா 134,703 சபையினால் செலவிடப்பட்டிருந்தது. | உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் கழிவு பொருள் முகாமைத்துவ நிலையத்தில் காணப்பட்ட GI குழாய்கள் 377 இல் 192 குழாய்கள் மாத்திரம் பௌதீக ரீதியில் காணப்பட்டமையால் 185 குழாய்கள் பற்றாக்குறை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு சபை பரிந்துரையின் பிரகாரம் இது தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2025 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் GI குழாய் | 2025 யூன் 26 இல் GI குழாய் தொடர்பான குழு அறிக்கையின் பிரகாரம் GI குழாய்கள் 85 விநியோகித்தல் பிரச்சினையுடனாக இருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். இதன் போது முறையாக விநியோகிக்கப்படாமை, தகவல்கள் புத்தகங்களில் குறிப்பிடப்படாமை, மீள பெற்றுக் கொள்ளல் தொடர்பாக தகவல்கள் குறிப்பிடப்படாமை அல்லது மீள வழங்குதல் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மெய்மையாய்வை நடாத்தி பொறுப்பு வாய்ந்த தரப்பினரை தீர்மானித்து இழப்பு நட்டங்கள் மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் இது தொடர்பான சரியான தகவல்களைக் கண்டறிந்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

### 3.6 செயற்திட்டம், இலக்குகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியின் போது பெறுமதி ரூபா 494,281 ஆன பாதீடு செய்யப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்துடன் ரூபா 154,598 ஆன வேலைகள் கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | கல்கமுவ பிரதேச செயலகத்தின் மூலம் கிரவல் வழங்குவதற்கு குறித்துரைத்த நிலம் ஒன்றை வழங்குமாறு வெளியிடப்பட்டமையால் இந்த வேலைகள் 2025 ஆம் ஆண்டு வரை முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. | உரிய வேலைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 19 வெற்றிடங்களும் 16 மிகைகளும் காணப்பட்டதுடன் வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்காலத்தில் ஆட்சேரப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான பதவியணியினர் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 06 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 20 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 10 சதவீதம் முதல் 188 சதவீதம் வரையிலான முரண்களும் காணப்பட்டது. அதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் பாதீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போது முன்னைய இரண்டு ஆண்டுகளை மாத்திரம் எதிர்வுகூறி பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |